
# ஆத்மஜோதி



சுவாமி ஸ்ரீ சிதானந்த மகராஜ்

# ஆத்ம ஜோதி

(ஓர் ஆத்மீக மாத வெளியீடு)

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே.

- சுத்தானந்தர்

ஜோதி 17 | விசுவாவசு ஞு ஆடி மீ 1உ [16-7-65] | சுடர் 9

## பொருளடக்கம்

1. சிதானந்தர் திருவடிகள் வணங்குவாம் 257
2. ஆத்மஜோதி எமது அபிமானப் பத்திரிகை 258
3. சிவானந்தரும் சிதானந்தரும் 259
4. வரவேற்புப் பாமாலை 262
5. உலகுக்கு விடுத்த செய்தி 264
6. தெளிவு 268
7. சித்த மருத்துவத்தின் மூலகர்த்தாக்கள் 270
8. சமயமும் வாழ்க்கையும் 272
9. என்னை வளர்த்த குருநாதர் 274
10. ஸ்ரீமத் ஞானானந்த கிரி சுவாமிகள் 282
11. அத்தனின் அருள் 284
12. சித்த மருத்துவம் 288

## ஆத்மஜோதி சந்தா விபரம்

ஆயுள் சந்தா ரூபா 75.00 வருட சந்தா ரூபா 3.00

தனிப்பிரதி — சதம் 30

கௌரவ ஆசிரியர் — திரு. க. இராமச்சந்திரா

பதிப்பாசிரியர் — திரு. நா. முத்தையா

''ஆத்மஜோதி நிலையம்'' நாவலப்பிட்டி. [சிலோன்]

தொலைபேசி எண்:— 353

# சிதானந்தர்
## திருவடிகள் வணங்குவாம்

-( மு த் து )-

திருநெறி வாழ்வு கண்டோம்
 திவ்ய ஜீவனம் கண்டோம்
ஒருநெறி உலகம் கண்டோம்
 ஒற்றுமை ஓங்கக் கண்டோம்
கருணைதான் பொழியக் கண்டோம்
 கண்களும் மல்கக் கண்டோம்
பெருமகான் சிதானந்த ஜீயின்
 பேரடி பதித்த போதே.

அறிவிலே அருணன் என்கோ!
 அன்பிலே அன்னை என்கோ!
நெறியிலே நிமலன் என்கோ!
 நினைவிலே நீயே இருத்தி!
கறியிலே உப்பு என்கோ!
 கருணையில் கடலே என்கோ!
சிறியதோர் இலங்கைத் தீவில்
 சிதானந்த ஜீவருக வருகவே!

கருணைபொழி முகத்தழகும் காதல்நிறை கண்ணழகும்
அருணனொளி அகத்தழகும் அம்பிகையின் அருள்நிறைவும்
தருணமழை போலுதவும் தயவுடைய திருக்கரமும்
திருவுடைய சிதானந்தர் திருவடிகள் வணங்குவாம்.

# ஆத்மஜோதி
# எமது அபிமானப் பத்திரிகை

(சுவாமி ஸ்ரீ சிதானந்த மகராஜ்)

ஆத்மஜோதி நிலையத்திற்கு விஜயம் செய்த அகில உலக திவ்ய ஜீவன சங்கத் தலைவர் ஸ்ரீ சுவாமி சிதானந்த மகராஜ் அவர்களுக்கு பக்தி பூர்வமான வரவேற்பு அளிக்கப் பட்டது. யோகிராஜ் சச்சிதானந்த சுவாமிகளும் வருகை தந்திருந்தார்கள். பூமாலையும் பாமாலையும் சூட்டி சுவாமி கள் வரவேற்கப்பட்டார்.

தமக்களிக்கப்பட்ட வரவேற்பிற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் சுவாமிகள் கூறியதாவது:—

ஆத்மஜோதி இலங்கையில் இருக்கும் இமயஜோதி. இலங்கை மக்களுக்குப் பகவான் கொடுத்த வரப்பிரசாதம் அது. இலக்கியங்களுக் கெல்லாம் பிரதி நிதியாகச் சேவை செய்கிறது ஆத்மஜோதி. சூரிய சந்திரர் உள்ளவரை ஆத்ம ஜோதி வாழ்க வாழ்கவே.

ஒரு மதம் சம்பந்தமான திருஷ்டியை மட்டும் ஆத்ம ஜோதி வெளிப்படுத்தவில்லை. எல்லா மதங்களுக்கும் பொது வான அத்தியாத்ம தர்மத்தை வெளிப்படுத்துவதில் உயர்ந்த சேவை செய்கிறது. நமது ஆச்சிரமத்திற்கும் ஆத்மஜோ திக்கும் நிரம்பத் தொடர்பு உண்டு. தெய்வீக வாழ்க்கை எங்கும் பரவ சேவை செய்கிறது ஆத்மஜோதி. ஆத்மஜோதி எமது பத்திரிகை என்ற அபிமானம் எமக்குண்டு.

ஸ்ரீ சிவானந்த சற்குருவின் சத்சங்கத்தைச் சேர்ந்த பக் தர்கள் எல்லோரும் அவரின் ஜோதிச் சுடர்களே. சுவாமி சிவானந்தாவின் உபதேசங்களை உணரும் போது வாழ்க்கை யில் புதிய சிவானந்த ஜோதி உதயமாகும். தூய வாழ்வின் மூலமாக எல்லோருக்கும் சிவானந்தப் பிரகாசம் உதயமா கும் - எல்லோருக்கும் அத்யாத்மீக ஞான விழிப்பு வரும் படி உங்கள் வாழ்வு அமைய வேண்டும். இதுவே சுவாமி சிவானந்தரின் செய்தி. ஆத்மஜோதி அந்தக் காரியத்தை அழகாகச் செய்து வருகிறது.

# சிவானந்தரும் சிதானந்தரும்

( ஆசிரியர் )

சுவாமி சிவானந்தரை நினைக்கும் போது இமாலயமே முன்வந்து நிற்கிறது. சிதானந்தஜீ அவர்களை நினைக்கும் போது எவறெஸ்ற் சிகரமே முன்வந்து நிற்கிறது. இருவரும் குருவும் சீடருமாவர். சிதானந்தஜீ அவர்கள் பிறக்கும் போதே சந்நியாசியாகப் பிறந்தவர் என்பது சிவானந்தரு டைய வாக்கு. ஆதலால் சிதானந்தஜீ எனது குரு. நான் அவரை வணங்குகின்றேன் என ஒரு இடத்திலே கூறியிருக் கின்றார்.

இதை நினைக்கும் போது ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ச தேவரது வாழ்க்கை நினைவுக்கு வருகிறது. ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்சதேவர் காளிதேவியை ஞானம்பெற்ற ஊனக் கண் ணால் தரிசித்தபின், நீ குருமூலம் உபதேசம் பெற வேண்டு மென்று தேவி கூறுகின்றாள். அதற்குரிய குரு தோதாபுரி என்று அவளே குருவையும் அறிமுகம் செய்து வைக்கின்றாள். பரமஹம்ச தேவர் தோதாபுரியிடம் சென்று குரு உபதேசம் பெறுகிறார். உபதேசம் பெற்ற மூன்றாம் நாள் பரமஹம்ச தேவர் தோதாபுரியின் அநுபவம் முழுவதையும் பெற்று விடு கின்றார். தோதாபுரி உடனே பரமஹம்ச தேவருடைய காலில் விழுந்து அப்பா நான் உனக்கு குரு அல்ல, நீ தான் எனக்குக் குரு. நான் நாற்பது ஆண்டுகளில் அடைந்த ஞானனுபவத்தை நீ மூன்றே நாட்களில் அடைந்து விட்டா யல்லவா? குருவும் சீடனும் மாறிப் புக்கிதயம் எய்தினர்.

சிவானந்த மகரிஷியிடம் சந்நியாசம் பெற்ற பலருள்ளும் சிதானந்தஜீ அவர்களே பக்குவான்மாவாக அவருக்குத் தென் பட்டது. அவருடைய பக்குவநிலையைக் குருஒருவராலேதான் அறிய முடியும். அப்பக்குவ நிலையை வேறு எச் சொற்களா லும் விளக்கிக் கொள்ள முடியாது. ஆகவேதான் சிவானந் தர் சிதானந்தர் எனது குரு என்றார். இருவரது பெயரிலும் ஒரு எழுத்தே வித்தியாசம் வ, த, ஆக மாறியுள்ளது. சிவம் எங்கும் நிறைவான மங்கலப் பொருள். சித் என்பது ஆகா சம். சிதாகாசம் எமது உள்ளத்தே உள்ளது. சிதாகாசத்

தேதான் சிவம் நடனம் ஆடுகின்றார். சிதாகாசத்தே ஆனந்தம் அனுபவிப்பவர் சிதானந்தர். சிதானந்தருள்ளே நிறைந்திருப்பவர் சிவானந்தர். ஆகவே சிவானந்தர் வேறு. சிதானந்தர் வேறு அல்லர். இருவரும் ஒருவரே.

அகில உலக திவ்ய ஜீவன சங்கங்களின் தலைவராக இருபத்தெட்டாண்டுகள் சுவாமி சிவானந்தர் இருந்தார். அவருடைய இடத்திற்குத் தகுதி பொருந்திய ஒருவரை அவரே வைத்து விட்டுப் போயுள்ளார். சிவானந்தருடைய பூத உடல் மறைந்தாலும் அவரது திவ்யாத்துமா சிதானந்தருள் புகுந்து நின்று கருமம் ஆற்றி வருகின்றது. சிதானந்தஜீ அவர்கள் சமீபத்தில் இலங்கை வந்த போது அவரைத் தரிசித்த பக்தர்களின் உள்ளத்தே இந்த எண்ணங்களே நிழலிட்டன. சிவானந்தரே சிதானந்தராக வந்துள்ளார்; சிவசிதானந்தராக வந்துள்ளார் என்று போற்றிப் பாராட்டினர்.

சிவானந்த மகரிஷி இலங்கை வந்த போது முப்பத்தாறு மணித்தியாலங்கள் மாத்திரமே இலங்கையில் அதுவும் கொழும்பு மாநகரில் மாத்திரம் தங்கியிருக்கும் வாய்ப்புக் கிடைத்தது. சுவாமிகளைக் கொழும்புக்குச் சென்று தரிசிக்கும் வாய்ப்புப் பலருக்குக் கிடைக்கவில்லை. சிதானந்தஜீ அவர்கள் பத்து நாட்கள் இலங்கையில் தங்கினார்கள். அரசன் முதல் ஆண்டி ஈறாக எல்லாரும் தரிசித்து அவர் அருளுபதேசத்தைக் கேட்கும் வாய்ப்புப் பெற்றனர். சுவாமிகள் இலங்கையில் கால் வைத்ததுமே இறைவன் நாமத்தையே ஆசியாக அருளினார்கள். அவர் அருளுபதேசத்தை நாடிச் சென்றவர்களுக்கு ஆண்டவனைக் கைவிடாதீர்கள்; அவன் தான் உங்கள் நன்மை தீமைகளை அறிபவன்; நாம ஜெபத்தின் மூலம் அவனை அடையுங்கள் என எல்லாருக்கும் ஏற்ற அருளுபதேசங்களை வாரி வழங்கினார்கள்.

சுவாமிகளுடைய இலங்கை வருகையால், மக்களிடையே ஒரு ஆத்மீக விழிப்பு உணர்ச்சி ஏற்பட்டுள்ளது. சுவாமி சிவானந்தர் இலங்கைக்கு வந்த போது கொழும்பு மாநகரில் மாத்திரம் அந்த விழிப்புணர்ச்சியைச் காண முடிந்தது. சிதானந்தஜீயின் வருகையால் இலங்கை முழுவதுமே ஒரு விழிப்புணர்ச்சியைப் பெற்றது. அவரது புனித பாதங்கள் பட்ட இடங்கள் தெய்வீக வாழ்வை அடைந்தன. இமயத்துக் கங்கை பல துறைகளிலும் ஓடிப் பலரையும் வாழ்விப்பது

போல இமயத்திலுதித்த தெய்வீக வாழ்க்கையும் சிதானந்தஜீ மூலம் அகில உலகமும் பரவுவதாக.

பரமஹம்சதேவரது ஞானச் செல்வத்தை சுவாமி விவேகானந்தர் அகில உலகமும் அறிய வைத்தது போல சுவாமி சிவானந்தரது திவ்ய ஜீவனச் செல்வத்தை சிதானந்தஜீ அவர்கள் அகில உலகமும் வாரி வழங்கிக் கொண்டிருக்கின்ருர்கள்.

''அரன் நாமமே சூழ்க: வையகமும் துயர்தீர்கவே'' என்பது ஞானசம்பந்தப் பெருமான் அன்று உலகிற்கு வழங்கிய ஆசிமொழி. அவருக்குப் பின் வந்த மகான்கள் அதே கருத்தைப் பல முறைகளில் பரப்பி வந்துள்ளார்கள். சுவாமி சிவானந்த மகரிஷிகளும் சிதானந்தஜீ அவர்களும் இலங்கை வந்த போது அதையே மக்கள் மத்தியில் வைத்துச் சென்ருர்கள். இத்தகையமகான்களின் வருகையால் இலங்கை வாழ் மக்களும் புனிதராயினர்.

---

உண்மையான விருப்பம், ஊக்கம், உறுதி, விடாமுயற்சி ஆகியவைகள் இருக்குமாகில் ஆத்மீகத் துறையில் எத்தகைய முன்னேற்றத்தையும் அடையலாம்.

ஃ ஃ ஃ

நடைமுறையில் ஆத்மீகக் கட்டுப்பாடு இருந்தால் தான் வாழ்க்கையின் இலட்சியத்தை அடைய முடியும். சிறிது ஜபம், தியானம் ஆகிய ஆத்மீக நெறிகளுங் கூடக் கொடிய பாபத்திலிருந்து உன்னை விடுவிக்க வல்லவையே.

ஃ ஃ ஃ

ஆத்மிகத் துறையில் முயற்சி ஒன்றும் வீண் போவதில்லை. உனது ஒவ்வொரு முயற்சியும் உனக்குப் புத்துயிரையும் மறுமலர்ச்சியையும் அளித்த வண்ணமாகவே இருக்கும்.

–சுவாமி சிவானந்த சரஸ்வதி.

ஃ ஃ ஃ

மட்டக்களப்பு தெய்வநெறிக் கழகத்தினர்

# சுவாமி ஸ்ரீ சிதானந்த சரஸ்வதி மகராஜ் அவர்களுக்கு

மகிழ்ந்தளித்த

## வரவேற்புப் பாமாலை

இறைவா நீ எங்கே இருக்கிறாய்? — ஏனோ
மறைவில் இருக்கின்றாய்? மானிடர் யாம் நின்வடிவம்
காண நினைந்தோம்! நினைந்த மறுகணமே
வீணாசைக்குள்ளே விழுந்து தடம் புரண்டோம்!
பெற்றார் புரிந்த பிழை புரிந்து துன்புற்றோம்!
சுற்றி மயக்கும் சுழற்சியிலே யாம் புரண்டோம்!
அன்பென்று சொன்னார்... அனைவருக்கும் தான் சொன்னார்!

பெண்பாலும் ஆண்பாலும் கூடிப் பெரும்பாலும்
தம்மிடையே உள்ள தசையுணர்வை அன்பாக்கி
சும்மா கொடுப்பதற்கோ பேரன்பைச் சொல்லி வைத்தார்?

காதலொரு மூன்று நாள்! கட்டிலறை முப்பது நாள்!
போதை கருவாய்ப் புறப்பட முன்னூறு நாள்!
பிள்ளை வளர்ந்து பெரிதாகிப் பின் உலகில்
தொல்லை கொடுக்கும் நாள் துன்பநாள் எத்தனைநாள்?
ஐயோ! மனிதன் பிறந்து பிறந்தழுந்திச்
செய்யும் கொடுமை சிறிதென்று செப்புவதோ?
காசென்றும் மாடிமனை என்றும் கதை புலம்பி
ஆசைப் பெருவெளியில் ஆடித் திரிவதுவும்
உண்ணும் மதுவின் வெறியும் உயிர்க்கொலையும்
மண்ணில் கயமை மலிந்து கிடப்பதுவும்
உள்ளுங்கால் நெஞ்சம் உருகுதற்கு யாருள்ளார்?
வெள்ளம் தடுக்க வரும் வீரர் எவருள்ளார்?
ஆகாயத்தின் மேல் அறிவு வலம் வரவும்
பாதாளத்தின் கீழ் இதயம் புதைபடவும்
தன்தலையில் குண்டுகளைத் தானே பொழிதற்கு
விண்வெளியில் செல்லும் வெறிமனிதன் உள்ளத்தில்
அன்புசுரக்க அருள்சுரக்க யார் வருவார்?
இன்பம் நிறைந்த இதயம் எவர் தருவார்?
வீணாசை கொண்டு வெளியோசை கொண்டிங்கே
ஆணாகிப் பெண்ணாகி ஆடும் உலகினிடை

தன்னுன்றுக்குள்ளே தசையுடலின் உட்புறத்தே
இன்னுன்றைக் காணும் இறைமனிதர் எங்குள்ளார்?
என்றுயாம் ஏங்கி இருக்கையிலே தெய்வத்தின்
குன்றில் இமயத்தில் முனிவன் திருக்கோயில்
ஒன்றைப் படைத்தான் இறைவன்! அடடாவோ!
வென்று பிறந்தான் சிவானந்த வீரமகன்!
அந்தப் பெரியன் அறம் வளர்த்துத் தெய்வத்தின்
சிந்தைக்குள் சேர்ந்தான்! எனினும் அவன்செயலை
நீளவளர்த்து நிலம் வளர்க்க ஓர் முனிவர்
கோலம் எடுத்தார்... கொடுத்து வைத்தோம்... உண்மை தான்!

சிதானந் தத்துறவி சீரடிகள் பரவி வரும்
இத்தரையில் யாம் வாழ என்னதவம் செய்தோமோ?
மீன்பாடும் தேனுட்டில் மெய்யறிவுத் தேன்பாடத்
தான்பாடும் ஞானத் தவமகனின் தாழ்தொழுதோம்!
வெட்டவெளி நகருள் வீடமைத்து வாழ்பவரை
மட்டுநகர் வாழும் மக்கள் வரவேற்ருேம்!
எல்லாம் உணர்ந்த இனிய விபுலானந்தன்
இல்லத்தில் வாழ்ந்தோம்! இறைமகனை வாழ்த்திஞேம்!
தெய்வநெறிக் கழகத் தொண்டர் திரண்டிங்கு
உய்யும் நெறியுரைத்த உத்தமனைக் கும்பிட்டோம்!
ஆழக் கடல்தாண்டி அன்புக்கடல் சுமந்து
வேளைக்கு வந்த விழுப்பொருளைப் போற்றிஞேம்!
வெள்ளிப் பனி இமய வெற்பிருந்து வந்தவரின்
உள்ளிருக்கும் தெய்வத்தின் உள்ளம் வணங்கிஞேம்!
நாங்கள் மனிதர்... இறைவன் நகர் தேடி
யாங்களும் சென்றலைந்தோம்... யாது பயன்? ஆமாம்...
இறைவா! நீ எங்கே இருக்கிருய்? ஏனுே
மறைவில் இருக்கிருய்? மானிடர் யாம் நின்வடிவம்
காண நினைந்தோம்... நினைந்த மறுகணமே
வீணுசைக்குள்ளே விழுந்து தடம் புரண்டோம்!
என்ருலும் உண்மைப் பொருளே! எமக்கொருவர்
இன்றுகிடைத்தார்... இவர் வழியே செல்வோம்!
உனக்கும் எமக்கும் உறவுவரும் காலத்தின்
கணக்குத் தெரிந்தவரின் காலடிகள் பின் தொடர்வோம்!
சிதானந்த முனிவன் ஆய்ந்து வரும் தெய்வத்தின்
தத்துவங்கள் கண்டோர் தலைவனையே கண்டோரே!

# சுவாமி சிவானந்தரைப் பற்றி சிதானந்தஜீ

# உலகுக்கு விடுத்த செய்தி

இருள் சூழ்ந்துவரும் இவ்வுலகின்கண் தெய்வீகவாழ்க்கையாகிய ஒளியைப் பரப்பும் பணியில் தங்கள் பங்கு பெருமதிப்பு வாய்ந்தது.

பாரதநாட்டு முனிவர்களின் இடையரு முயற்சியும் தியாக வாழ்வும், மக்கள் தமது அகத்தே சாந்தி எய்தவும் புறத்தே இயைபுடன் வாழவும் வழிகாட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டன. மனிதனை உயர்த்துவதே அவர்களது உளப்பூர்வமான குறிக்கோள். தங்கள் உடன் வாழ்வோருக்கும் எதிர்வரும் சந்ததியாருக்கும் அவர்கள் வழங்கிய அருட்கொடை இதுவே. இத்துறையில் ஸ்ரீ சுவாமி சிவானந்தர் ஆற்றிவரும் தன்னலமற்ற வாழ்க்கைப் பணி யாவரும் அறிந்தது.

இன்று மனித சமுதாயத்தின் முன்னே மாபெரும் பிரச்சனையொன்று தோன்றியுள்ளது. எண்ணற்ற மக்களின் உள்ளங்களைப் பீதி பற்றியிருக்கின்றது. விஞ்ஞானத் துறையில் மனிதன் அடைந்துள்ள முன்னேற்றமே பல நாடுகளுக்குப் பெரும் பிரச்சனையை ஏற்படுத்திவிட்டது. பேரழிவு தங்களை எதிர்நோக்கி இருப்பதாகப் பொதுமக்களுக்குத் தோன்றுகிறது. தனது சொந்த மடமையிலிருந்தும் பிடிவாதத்திலிருந்தும் தீமையிலிருந்தும் மனிதனைக் காக்க, இவ்வபாய நிலையின் காரணமோ அதன் பரிகாரமோ இன்னும் உணரப்படவில்லை.

### நம்பிக்கையூட்டும் செய்தி

கற்றறிந்த தலைவர்கள் இப்பிரச்சினையைத் தீர்க்கும் முறையில் ஏதோ அடிப்படையான பிழை இருப்பதாக நீங்கள் உணர்கிறீர்கள். இம் முறைகள் திரும்பத் திரும்பத் தோல்வியுறுவதையும், நிலைமை மேன்மேலும் மோசமடைந்து கொண்டு போவதையும் காணும்போது உங்கள் கவலை அதிகரிக்கின்றது. உங்கள் உள்ளத்தில் சாந்தியில்லை. இருளில் உழலும் மனித குலத்தின் பாதையில் ஒளி தோன்

ருதா என ஏங்குகிறீர்கள். தற்கால மனிதன், தனது துவேஷம், பலாத்காரம், பேராசை, குரோதம், சுயநலம் ஆகியவற்ருல், தானே சிருட்டித்துக் கொண்ட வலையிலிருந்து விடுதலை காண அனைத்துணரும் பேரறிவிலிருந்து வழி தோன்ற வேண்டுமென விழைகிறீர்கள். நம்பிக்கையூட்டும் செய்தியொன்றை எதிர்பார்க்கிறீர்கள். உலகின் கவலை மிக்க குழப்ப நிலையை மாற்றி நலம் விளைக்க, உங்களால் இயன்றதை யெல்லாம் செய்ய ஆயத்தமாக இருக்கிறீர்கள்.

இங்ஙனம் நீங்கள் உணர்வதும் விரும்புவதும் நியாயமே. உங்களைப் போல் உள்ளத்தில் நம்பிக்கையும் நல்லெண்ணமும் கொண்ட அறவோர் அனைவரும் இறைவனது தெய்வீக இச்சை உலகில் செயற்படுமாறு உழைத்தல் அவசியமாகும். ஏனெனில், மனிதனின் மூலம் இறைவன் செயலாற்றுகின்ருர். அடக்கம் வாய்ந்த உங்களைக் கருவியாகக் கொண்டு இறைவன் மனித சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கான தமது திட்டங்களை நிறைவேற்றுகின்ருர்.

''அற நெறியை விரும்புவோர் அருள் பெற்றவர்கள்'', ''சமாதானத்தை நிலைநாட்டுவோர் அருள் பெற்றவர்கள்; ஏனெனில், அவர்கள் தெய்வக் குழந்தைகள் ஆவர்'' என்ற வார்த்தைகள் வீணுகக் கூறப்பட்டவையல்ல, ''பரலோகத்தைப் போலவே பூவுலகிலும் உமது இச்சை நடைபெறுமாக'' என்று நீங்கள் பிரார்த்தனை செய்தால் மட்டும் போதாது. உலகில் சமாதானத்துக்கும் அன்புக்கும் நன்மைக்கும் தெய்வீக இசைவுக்கும், இறைவனது இச்சை பயன்படுமாறு நீங்கள் வாழ்நாளில் மனப்பூர்வமாக உழைக்க வேண்டும்.

### நிலைமைக்குப் பரிகாரம்

இந்த உயர் இலட்சியத்துக்காக இடையருது உழைத்துத் தன்னலமற்ற தியாக வாழ்வு வாழ்ந்து வரும் ஒரு தெய்வீக ஆன்மா இரிஷீகேசம் சத்குரு சிவானந்த சுவாமிகள் என்பது உங்களுக்குத் தெரியும். இமயமலைச் சாரலிலுள்ள இக் குக்கிராமத்தில், கங்கையின் புனிதக்கரையில், தமது சின்னஞ்சிறு குடிலில் இருந்துகொண்டு, மனிதனது தெய்வீகத் தன்மையைப் பற்றியும், அத்தன்மைக்கு உருக்

கொடுத்து வெளிப்படுத்தத் தெய்வீக வாழ்க்கையின் அவசியத்தைப் பற்றியும் தமது அருட் போதனைகளைப் பரப்பி வருகின்றார். சுவாமி சிவானந்தர் அகிலமனைத்தையும் நேசிக்கும் சாது. ஒருமைக் காட்சியில் திளைத்திருக்கும் உத்தமர். யாவர்க்கும் பற்றின்றிப் பணி புரியும் பண்பாளர். புறப் பிரச்சினைகள் அனைத்திற்கும் பரிகாரம் முடிவில் மனிதனது அகத் தன்மையிலேயே தங்கியுள்ளது என்பது அவரது தெளிவும் உறுதியும் வாய்ந்த செய்தியாகும். உலக நெருக்கடியாகத் தோன்றுவது உண்மையில் மனிதரின் இதயங்களில் உள்ள நெருக்கடியின் நிழலும் விளைவுமேயாம். மனித உள்ளத்தில் உயர்ந்தன யாவும் புறக்கணிக்கப்பட்டு, அங்கு பேராசை, துவேஷம், சுயநலம் ஆகியவற்றுக்கு இடமளிக்கப் பட்டுள்ளது. மனிதனது ஆசைகளிலும், அவனது செயல்களின் நோக்கங்களிலும் ஒழுக்கத்தின் வறட்சி தெளிவாகப் புலப்படுகின்றது. ஒழுக்கச் சார்பற்ற கல்வி, சமீபத்திய தலைமுறையின் உள்ளங்களைக் கறைப்படுத்தி மூளையைக் குழப்பியுள்ளது. நன்னடத்தையும் உயர்ந்த இலட்சியங்களும் மனித வாழ்க்கையில் உரிய இடம் பெறுவதில்லை. பலவந்தமாகக் கைப்பற்றுதலும் உடமையைப் பெருக்குதலுமே மனிதச் செயல்களின் இலக்கணமாய் விட்டன. இதுவே மனித இயல்பில் இப்போது தோன்றியுள்ள நெருக்கடி. எமது பிரச்சினை யுத்தமும் பலாத்காரமுமோ, அழிவும் சிதைவுமோ அல்ல, உண்மையான பிரச்சினை மனித இயல்பின் கோட்டமேயாகும். மனித இயல்பின் நன்மாற்றமே இதற்குப் பரிகாரம். இம் மாற்றம் எவ்வளவு மெதுவாக நிகழ்ந்தாலும் சரியே. இதனை விட்டு, உச்சி மகாநாடுகளாலும் சந்தேகத்துக்கிடமான உடன்படிக்கைகளாலும் இப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது; ஒழுக்கவீனம், ஆன்மீக மறதி ஆகியவற்றிலிருந்து மனிதனைக் காப்பதன் மூலம் இதனைத் தீர்க்கலாம்.

## எமது கடமை

குருதேவரின் ஆன்மீக போதனைகளின் தேவையையும் மதிப்பையும் மேன்மேலும் அதிகமான மக்கள் உணரச் செய்வதன் அவசியத்தை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். ஏனெனில் கண்ண பெருமான், புத்தபிரான், ஏசுநாதர்' ஆகியோரைப் போன்ற முற்காலத் தெய்வீகத் தூதர்களது

ஞானத்தின் சாரத்தை இப் போதனைகள் மக்களுக்கு வழங்குகின்றன.

ஒழுக்க நெறிக்குப் புத்துயிரளித்து, ஆன்மீக இலட்சிய வாதத்தைப் பரப்புவதற்காகச் சோர்வின்றி உழைத்துவரும் சக்திக் களஞ்சியமான மகான் ஒருவரை நவீன உலகம் பெற்றுள்ளது. அவரே சுவாமி சிவானந்த மா முனிவர். அவரது உயிர்த் துடிப்புள்ள போதனைகளை உலகின் எல்லாப் பகுதிகளிலுமுள்ள எண்ணற்ற ஆண் பெண்கள் அறிந்து பயன்பெறச் செய்வதற்கு உங்கள் உதவி தேவை. அவரது தெய்வீக வாழ்க்கைப் போதனைகளைப் பற்றி நீங்கள் அறிவீர்கள்; அவற்றைப் பெறும் பாக்கியம் உங்களுக்குக் கிடைத்துள்ளது. ஆனால் உங்களைப் போல் மகிழ்ச்சியும் நல்வாய்ப்பும் பெறுதவர் எத்தனைபேர் என்பதை எண்ணிப் பாருங்கள்! அவர்களும் இம் மகானைப் பற்றியும் அவரது சக்தி வாய்ந்த போதனைகளைப் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறோம். அவர்களும் அவரது போதனைகளின் நற்பயனைப் பெற்று, அவருடன் ஆன்மீகத் தொடர்பு கொள்வதன் மூலம் தங்கள் வாழ்க்கையை வளமுறச் செய்ய வேண்டும் என்பது எங்கள் விருப்பம்.

## தெய்வீக வாழ்க்கையின் அழைப்பு

நீங்கள் இதனைச் செய்ய உதவுவதற்காக ஒவ்வோராண்டும் (சுவாமி சிவானந்தரின் பிறந்த தின ஆண்டு நிறைவுத் திருநாளில்) ''திவ்யஜீவன்''ப் பத்திரிகை விசேஷப் ''பிறந்த தின மலர்'' ஒன்றை வெளியிட்டு வருகிறது. அவரது ஒளியூட்டும் வாழ்க்கை, சோதி மயமான தனிப் பண்பு, உலகசேவை, அறிவூட்டும் போதனைகள் ஆகியவற்றினை உங்களைப் போன்ற ஆன்மீக நாட்டமுடைய பிறரும் அறியச் செய்வதே இம் மலரின் நோக்கம்.

மக்கள் தமது உயர் இயல்பை அறியச் செய்வது தற்போதுள்ள மாபெரும் தேவை. தெய்வீகத் தன்மையுடன் தமக்குள்ள அகத் தொடர்பை மக்கள் உணரச் செய்வதன் மூலம் அவர்களை நல்வழியிற் செலுத்துதல் முக்கியமானது. தெய்வீக வாழ்க்கையின் உள்ளத்தைத் தொடும் அழைப்பு உலகின் ஒவ்வொரு மூலைக்கும் எட்ட வேண்டும். மனிதனை

நன்னெறிப்படுத்த இந்த நம்பிக்கை ஒன்றே உள்ளது. குரு தேவரின் அகில மனைத்துக்கும் பொதுவான அருட்போத னைகள் உங்கள் வாழ்க்கையில் எங்ஙனம் உதவியுள்ளன என் பதை உலகனைத்தும் உணரட்டும்.

'உங்கள் ஆன்மீக எழுச்சி உலகின் உயர்வாழ்வுக்கு ஊக்கமளிக்க உதவட்டும்'.

---

# தெளிவு

(சங்கீதபூஷணம்: அ. கி. ஏரம்பமூர்த்தி)

அகில உலக திவ்ய ஜீவன சங்கத் தலைவர் சுவாமி
சிதானந்தஜியின் அருளுரையை ஆதாரமாகக்
கொண்டு ஆக்கப்பட்டவை.

நான்யா ருலகிலேன் பிறந்தேன்
நானெங்கே போக வேண்டும்
ஊன்உரு எடுக்கு முன்பு
உறைவிட மெங்கு என்று
வீண்தன ஆசை பாசம்
விலக்கிய நிலையில் நின்று
ஊன்றியுட் குவிந்து கேட்கின்
உண்மையை யறிய லாமே.

பூமியும் பொன்னும் பெண்டும்
பிள்ளையும் சொந்த மல்ல
நாமெடுத் திட்ட தேகம்
வாழ்வுமே கனவாய்ப் போகும்
தாமத மின்றி நித்தந்
தெய்வ ஐக்கியத் திலைலே
தாமரை போல நின்று
தன்னையே யுயர்த்த வேண்டும்.

நம்மை நாமறிய வேண்டும்
    கடவுளை யுணர வேண்டும்
செம்மையா மறிவி தாகும்
    பிறப்பிலட் சியமு மாகும்
மும்முர மாகக் கோள்செல்
    முயற்சிவிஞ் ஞான விந்தை
இம்மையிற் காணும் மேலா
    மறிவெனக் கூறு றுதே

தெய்வசிந் தனையி னூடு
    தொழில்களைச் செய்ய வேண்டும்
ஐயனின் தொடர்பி ழந்தா
    லழிவினு ரம்ப மாகும்
தெய்வத்தை நினைந்தால் வாழ்வு
    மறந்து விட்டாலோ சாவு
வையத்திற் சுகமோ அற்பம்
    அவ்வையுஞ் செல்லாக்கா சாமே.

சமயங்கள் சமமே யாவும்
    சற்குரு கடவு ளாகும்
அமைந்தஇம் மனுப்பி றப்பே
    அனைத்திலு முயர்ந்த தாகும்
நமைமிகக் கீழே தள்ளுந்
    தன்னலம் பொறாமை கர்வம்
அமைதியா மிடர்கள் நீக்கும்
    ஆண்டவன் நாமந் தானே.

அன்புதான் தெய்வ மாகும்,
    அவனருள் பெற்றோ ருக்கே
என்றுமே தியானஞ் செய்ய
    ஏற்றசந் தர்ப்பங் கிட்டும்,
ஒன்றுதான் கொண்டு செல்லோ
    மொண்டியே யாக வந்தோம்
என்றுமே கடவுள் தானே
    எங்களின் சொந்த மாமே.

———

# சித்த மருத்துவத்தின் மூலகர்த்தாக்கள்

(டாக்டர்: ச. ஆறுமுகநாதன் கல்லிடை குறிச்சி.)

மருத்துவ சரிதத்தை ஆய்ந்த வல்லுனர்கள் ஒருமிக்க இறைவனிடத்திருந்தே மருத்துவ உண்மைகள் வெளியான தாகக் கூறுகின்றனர். கீழ்த்திசை மேல்திசை நாடுகளில் ஆலயங்களில் உள்ள அறவோர்கள் நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்த தாகத் தெரிய வருகிறது. இதற்கு ஆதாரமாக இன்றும் நம்நாட்டு ஆலயங்களில் அரசமரம், வேப்பமரம், வில்வமரம், மருதோன்றி, துளசி, செம்பரத்தை, மாதவி மாசிப்பத்திரி, மாதுளை ஆகிய மூலிகைகள் பெரும் பாலும் மருத்துவப் பயனறியா மக்களின் கண்களுக்கு தினசரி காட்சி அளித்தலைக் காணலாம்.

பண்டைய இதிகாசங்களும், புராணங்களும் மக்களிடை வழங்கிவரும் கற்பனைக்கதைகளும் மற்றும் முற்காலஇலக்கண இலக்கியங்களும் சித்த மருத்துவத்தின் மூலகர்த்தா சிவனார் என்றும், ஆயுர்வேதத்தின் ஆதி கர்த்தா பிரமன் என்றும் கூறுகின்றன. இத்துடன் நில்லாது மற்றும் ஒரு கருத்து நிலவுகின்றது. அதாவது உமாதேவியான சக்தி திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளாரான சிவனாரிட மிருந்து சித்தமருத்துவத்தைக் கற்று நந்தி தேவர்க்கு போதித்ததாகவும் நந்தி தேவர் வையத்து மக்கள் நலன்கருதி அகத்தியனாருக்கு சித்தமருத்துவத்தை சொன்னதாகவும் கூறுகின்றன. இதன் காரணமாகவே சித்த மருத்துவத்தை அகத்தியர் மருத்துவம் என்றும் கூறப்படுகிறது.

அகத்தியனாருக்குப் பின் திருமூலர் மருத்துவ முறையும் போகர் மருத்துவ முறையும் தோன்றின. சித்தர்கள் பதினெண்மருள் அகத்தியர், திருமூலர், போகர் ஆகிய மூவரும் சித்தமருத்துவத்தின் தனிப்பெருந் தன்மையைக் கண்ட மூல கர்த்தாக்களாவர். இதே போன்று சநகர், ஸுச்ருதர், வாக்படர் ஆகிய மூவரும் ஆயுர்வேத முறையைக் கண்ட மூல

கர்த்தாக்கள் என்று சொல்லப்படுகிறது. இரும்பினைப் பொன்னுக்கும் இரசவாதம் (Alchemy) மற்றும் மணி, மந்திரம், மருந்து ஆகிய சித்தமருத்துவத்தின் அதிமுக்கிய அம்சங்களைக் கொண்ட அரும்பெரும் நூற்கள் பல மேற்கண்ட முச்சித்தர்களாலே படைக்கப்பட்டனவாகவே இருக்கின்றன.

நாத விந்துவின் ஆதியான அருவ உருவமற்ற இயற்கையின் இருவகை இயங்கும் உண்மை ஒழுங்கினைக் கொண்ட சக்தி-சிவம் என்றதத்துவத்தை சித்தமருத்துவத்தில் இணைப்பிக்க நாதமென்ற கெந்தகத்தை சக்தியாகவும் விந்துவென்ற பாதரசத்தை சிவமாகவும் அமைத்து, சிவத்திடமிருந்து சக்திக்கும், சத்தியிடமிருந்து மற்றயோருக்கும் சித்தமருத்துவம் பரவியதென்பதால் சித்தமருத்துவத்தின் மூலகர்த்தா சிவனுர் என்பதாகவே தெரிகின்றது. சிவனுர்தான் சித்தமருத்துவத்தின் மூலகர்த்தா என்பதை மெய்ப்பிக்கும் வண்ணம் தஞ்சை மாவட்டத்தில் வைத்தீஸ்வரன்கோவில் என்ற தலம்உள்ளது. இங்குள்ள மூலவர் வைத்தியநாதன் என்ற பெயர் கொண்டும். அம்மன் வாலாம்பிகை என்ற பெயர் கொண்டும் இலங்குகின்றனர்.

(தொடரும்)

---

**சாதகன் தன் யதார்த்த சொரூபத்தையும் தனக்கும் பிரம்மத்துக்கும் உள்ள சம்பந்தத்தையும், தனக்கும்உலகுக்கும் உள்ள தொடர்பையும் நன்கு உணர வேண்டும். சாதகனுக்கு அத்தியாவசியகத் தேவைகள் மிகக் குறைவாகவே இருக்க வேண்டும். அப்பொழுது தான் அவன் மனம் சலனமற்றுச் சாந்தியில் திளைத்து நிற்கும். அவனுக்குச் சுயேச்சையும் ஏற்படும்.**

—சுவாமி சிவானந்த சரஸ்வதி—

# சமயமும் வாழ்க்கையும்

(கைதடி கந்தராசன்)

**வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.**

இஃது தெய்வப் புலவர் திருவள்ளுவர் திருவாக்கு.

ஆறறிவு படைத்தும் ஐயறிவு மாக்கள் போற் பண்பாடற்ற நிலையிலிருந்து மக்கள் வாழ்க்கையைத் திருத்தும் நோக்கமாகத்தான் சமயங்கள் எழுந்தன. உலகில்எம்மதத்தை யாராய்ந்தாலும் இவ்வுண்மை புலப்படும். சமயம் என்பது வாழ்க்கையை செவ்வனே நடத்துவதற்கு உறுதுணையாக உள்ள தொன்றாகும். உலகத்தில் வாழ் வாங்கு வாழ்தல்தான் சமய வாழ்க்கை.

நாம், வாழ்க்கை என்றால்என்ன? சமயம் என்றால்என்ன? என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். வாழ்க்கை என்ற ஒன்று உயிர் வாழ்வன எல்லாவற்றிற்கும் உரிமையுடையதாய் இருக்கிறது. ஆனால் அது மனிதனுக்கு சிறப்புடைப் பண்டமாக இருக்கிறது. மனிதனின் வாழ்க்கையைப் புறம்பு படுத்தி மனிதவாழ்க்கை என்று அறிஞர்கள் கூறுகின்றார்கள். பகுத்தறிவு படித்த மனித வாழ்க்கை நோக்குடையதாக அமைதல் வேண்டும். வையத்து வாழ்வாங்கு வாழ்தலே நோக்குடையதாய் வாழ்தல். அந் நோக்குச் சிந்திப்பது தெய்வத்துள் வைத்தல்.

திருவள்ளுவர் கூறிய வையத்து வாழ் வாங்கு வாழ்பவர்களே சமயிகள். இவர்கள் சமயம் வேறு வாழ்க்கை வேறு என்று கருதாதவர்கள். இவர்களே இவ்வுலகத்தை சுவர்க்க பூமியாக்குகிறவர்கள். இவர்களே வையத்தையும் சுவர்க்கமாக்குகிறவர்கள்.

ஆகையால் வையத்து வாழ் வாங்கு வாழ்தலே நம் ஒவ்வொருவரினதும் வாழ்க்கைக் குறிக்கோளாய் அமைதல் வேண்டும். அதுவே மேலான வாழ்க்கையாகும். அதுவே இம்மையின்பத்தையும் மறுமையின்பத்தையும் தரத்தக்கது.

ஆறறிவு படைத்த மனிதன் தான் எதற்காக வாழ்க்கை வாழுகிறேன் என்பதையெல்லாம் மறந்து இடைநேர் நோக்குகளில் தன்வாழ் நாளை வீணுக்குகிறுன். இங்ஙனம் இன்றி அவன் தன் வாழ்க்கையை சமயியாந் தன்மைக்கு இட்டுச் செல்வானேல் அவன் கடவுளை வணங்கியடையும் முத்தியின்பத்தையடைவான். இதுதான் வாழ்க்கை, மனித வாழ்க்கை. இவ் வாழ்க்கைக்குத் தான் பெயர் சமயம். வாழ வேண்டிய இடத்தில் வாழ்ந்து கொண்டிருத்தலே சமய வாழ்க்கை. வாழ வேண்டிய வளமுடைய இடமே சமயம். உண்மை வாழ்க்கையைச் சிந்திக்கவல்ல உண்மைச் சமயங்களே மெய்ச் சமயங்கள். இப்படியான உண்மை வாழ்க்கையைச் சிந்திக்கும் சமயங்களிலொன்று சைவம். இச்சைவ சமயத்தை அடையக் கூறப்படும் வழி சைவ மார்க்கங்கள் எனப்படும். இச் சைவ மார்க்கம் சைவ சமயத்தைச் சிந்திக்கும். அப்போது நாம் உண்மையான சைவசமயிகளாக ஆகிவிடுவோம். அப்போது நாம் வாழும் வாழ்க்கைதான் சமய வாழ்க்கை எனப் பொருந்தும். சமயம் என்பது இறைவனை அடைய உதவும் ஓர் ஊன்றுகோல்.

உண்மைச் சமயங்கள் அகச் சமயங்கள் என்றும் உண்மை வாழ்க்கை அக வாழ்க்கை யென்றும் கூறப்படும். சமயம் வேறு வாழ்க்கை வேறல்ல. சமயமும் வாழ்க்கையும் ஒன்றே.

அறநெறி வழி வழுவாது பொருளீட்டி நிறைந்த மனமுடையோராய்

**தாமின் புறுவது உலகு இன்புறக்கண்டு**
**காமுறுவர் கற்றறிந்தார்.**

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்குக்கு இலக்கியமாக வாழ்கின்றவர்களே சமயவாழ்க்கை வாழ்கின்றவர்கள். இவர்கள் சமய நூல்கள் சொல்லிய தத்துவங்களைப் பின்பற்றி வாழ்வர். மறந்தும் பிறன்கேடு சூழார். தராசு முனைபோல் நீதி பிறழார். எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுமென்று எண்ணுவர். எது நன்மையோ அதையே செய்வர். நாடொப்பன வற்றையே செய்து வாழ்வர். உலக வாழ்க்கையில் பற்று இருந்தபோதும் தாமரை இலை நீர் போல் பற்றற்று இருப்பர். இவர்கள் பொருட்டே மழையும் பெய்கின்றது. இவர்கள் தான் சமயத்தின் வழியொழுகி சமய வாழ்க்கை வாழ்கின்றவர்கள்.

# என்னை வளர்த்த குருநாதர்

(ரி. கிருஷ்ணபிள்ளை)

கொழும்புத்துறை யோக சுவாமிகளுடன் எனக்கு சிறு பராயத்தில் இருந்து பழக்கமுண்டு. அதனால் எனது அநுபவம் முழுதும் கூற இடம் தராது. ஆனதால் சில வாக்கியங்களை மாத்திரம் குறிப்புக்களுடன் கூறிவிடுகிறேன். அவற்றை மற்ற அன்பர்கள் அறிந்து அவர் திருவடியை இப்பொழுதும் நினைந்து உய்வார்களாக.

முதல் முதலாக 1920ம் ஆண்டு சுவாமிகளை காங்கேசன் துறை ரேட்டில் சந்தித்தேன். எனக்கு அப்போ 14 வயது. சுவாமிகளுக்கு 50வயது இருக்கும், தாடி, தலைமயிர் நல்ல வெண்மைநிறம். இந்த நேரத்தில் நமது தகப்பனர் நல்ல அறிவாற்றல் உள்ளவர். துறவை விரும்பி இந்தியா போய் விட்டார் என அறிந்து எப்படியும் கண்டு பிடிக்க வேணு மென்று தேடித் திரிகிறோம். அப்போது சுவாமிகளை நானும் தாயாரும் தகப்பனரைக் காணவில்லை வருவாரோ என்று சாத்திரம் தான் கேட்டோம். இரண்டு மூன்று தினம் ஓடிப்போடா என்று விரட்டி விட்டார். கடைசியாக ஒரு நாள் சொன்ன மறுமொழி:–

**''உன்னப்பன் இலை மறைவாய்**
**இருக்கிறன் தேடினல் வருவான்''**

அன்று தொடக்கம் சுவாமிகளை எனது தகப்பனராகவே பாவித்து வந்தேன். அன்று தொடக்கம் அவர் கிருபையால் நானும் எனது சகோதரர்களும் வாழ்க்கையில் நன் நிலையை அடைந்தோம்.

அடுத்ததாக எனது விவாகத்தின் பின் கிருகஸ்தனய் இருக்கும் பொழுது 1942இல் சுவாமிகள் அடிக்கடி நமது வீட்டுக்கு வருவார். வரும் பொழுது கீரைப்பிடி கொண்டு வந்து கொடுத்து பிட்டு அவித்துச் சாப்பிடுவார். அப்படி அவர் வீட்டுக்கு வந்த பொழுது நமது மனைவி கர்ப்பவதியாய் இருந்தார். சுவாமிகளை விழுந்து வணங்கும் பொழுது, சொன்ன வாக்கு:-

நீ என்னை வணங்க வேண்டியதில்லை. நீ தாயாய் இருக்கிறாய்; உன்னை வணங்குதற்கே நான் இங்கு வந்தேன்.

இது சம்பவித்து ஒரு மாதத்திற்குள் மனைவியார் சிவபதம் அடைந்தார்.

மூன்றாவதாக எனது குழந்தை யொன்றுக்கு ஏற்பட்ட சிறுபிள்ளை வாதத்தால் யாழ்ப்பாணம் ஆசுப்பத்திரியில் வைத்திருந்தேன். கடுமையான வருத்தம். ஏதும் சொல்லுவார் என்று நினைத்து நான் சுவாமிகளிடம் பயத்தில் போகவில்லை. அதனால் ஒரு ஆயுள்வேத வைத்தியரைக் காட்டி வீட்டுக்குக் கொண்டு போய் வைத்தியம் செய்ய நினைத்து வைத்தியர் வீட்டுக்குப் போய்க் கொண்டிருக்கும் பொழுது சுவாமிகள் றோட்டில் தென்பட்டார். அப்போ சொன்ன வாக்கியம்:-

**நீ ஏன் ஓடி அலைகின்றாய்**
**எல்லாம் உள்ளபடியே நடக்கும்**

அப்படிச் சொல்லியும் நான் போய் வைத்தியரைக் கொண்டு வந்து காட்டி அடுத்தநாள் வீட்டுக்குக் கொண்டு போய் ஆயுள்வேத வைத்தியம் செய்யத் தீர்மானித்தேன். அன்று இரவு குழந்தை காலமாகினது. அப்போது தான் சுவாமிகளின் வாக்கியத்தை நினைத்தேன்.

நான்காவதாக, 1960ஆம் ஆண்டு வேலை மாறி வந்த பொழுது சுவாமிகளைத் தரிசிக்கச் சென்றேன். எனது முதற் சந்திப்பின்பின்பு சுவாமிகளைக்கண்டால் மௌனமாய் இருந்து கொள்வது வழக்கம். அவர்கள் ஏதும் சொன்னால் குறிப்பாகக் கவனித்துக் கொள்வேன். சுவாமிகள் என்னுடன் தகப்பன் மகனுடன் பேசுவதுபோல் சகசமாய்க் கதைப்பார். எல்லாரையும் விசாரிப்பார். நான் 1960இல் கண்ட இடம் கொழும்புத்துறை ஆச்சிரமம். அப்போது அவர் சொன்னதாவது ''நீ கிட்ட மாறிவந்து விட்டாய் இனி அடிக்கடி இங்கு வரலாமே என்றார்''. அப்பொழுது நான் சுவாமிகளிடம் எப்போதும் இங்கு இருப்பீர்களா, வெளியிடங்களுக்குச் செல்ல மாட்டீர்களா என்று கேட்டேன். அதற்குப் பதில்:-

**''நுண்ணிய உணர்வுடன் பார்த்தால்**
**நான் இருப்பது உனக்கு விளங்கும்''.**

இதன்பின் சுவாமிகளிடம் அடிக்கடி போவது வழக்கம்.

இதற்குமுன் 1920இல் இருந்து 1960 வரையில் சுவாமிகளுடன் மற்றும் அன்பர்கள் போல் அதிக தொண்டு செய்யவுமில்லை, நேர் தொடர்புமில்லை. ஆதலால் யாழ்ப்பாணம் வரும் வேளைகளிலும், பிற ஊர்களில் வந்து நிற்கிறார் என அறிந்த போதும் போய்த் தரிசனத்தைப் பெற்றுக் கொள்வேன். சுவாமிகளுக்குப் பால், பழம் ஏதும் நிவேதனமாகக் கொடுத்திருப்பேன். சிலவேளைகளில் சுருட்டுப் பார்சலும் கொடுத்து இருப்பேன். சந்தோஷமாக வாங்கி படுக்கைக்குக் கீழ் வைப்பார்.

நான் சுவாமிகளைச் சிறு வயதில் இருந்து சந்திக்கும் போது உனது கடமைகளிலிருந்தும் தவறப்படாது என்று கட்டளையிடுவார். இது தகப்பனார் இல்லாத படியால் பொறுப்பு எல்லாம் எனது என்று கருத்துப்பட சொல்லுவார். எனக்கும் சுவாமிகளுக்கு மிடையில் நெருங்கிய மானசிகத் தொடர்பு 1920ம் ஆண்டு தொடக்கம் இருந்ததாக எனக்கு விளங்குகிறது.

எனது இல் வாழ்க்கையில் நான் தீய கருமங்களோ, நற்கருமங்களோ செய்யும்போது சுவாமிகள் கூட நிற்பது போல் தோற்றும். அதுவே திருவருள். ஏனெனில் அவருடைய சிந்தனையே எப்போதும் என் மனதில் விலகாது நின்றது. அதனால் தீயனவற்றை விலக்கி நற்கருமங்களைச் செய்ய முயன்றேன். என்னில் மலபரிபாகம் நடப்பதையும் உணர்ந்தேன். இதனால் சைவ ஒழுக்கமுறை அல்லது சமய முறைப்படி ஒழுகிக் கொண்டுதான் கடவுளை நினைக்கவும் கும்பிடவும் தகுதியுடையவராக வேண்டும் என்று நினைத்தேன். தீய செயல்களில் ஈடுபட்டவர்கள் கடவுளை நினையாது மறந்து விடுகிறார்கள். எந்தத் தீய செயலில் ஈடுபட்டவனும் ஈஸ்வரனில் சிந்தனையுள்ளவனாயிருப்பானாயின் அவரே வழிகாட்டி அவனை நல்வழிக்குச் செலுத்தி ஈடேற்றுவார்என்பதை உறுதியாக நம்பவேண்டும்.

''கொல்வா ரேனும் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனும் இயம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையும் நீங்குவ ரென்பரால்
நல்லார் நாம நமச்சிவாயவே''

— நமச்சிவாயத் திருப்பதிகம்.

சுவாமிகளுடைய வாக்கியங்கள் இரு கருத்துள்ளதாகவே இருந்தன. ஒன்று அந்த நேரமுள்ள சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாருக, பின்னே வருவதை முன் அறிவிப்பார். மற்றது பரமார்த்தமான பொருளை இலகுவில் விளக்கும். சுவாமிகளுடைய தொடர்பினல் சமய நூல்களையும், ஞானநூல்களையும் வாசித்து அறிவில் வளர்ச்சி யடையப் பெற்றேன்.

சுவாமிகளுடைய வாக்கியங்களுக்குப் பின் சில துக்ககரமான சம்பவங்கள் நேர்ந்திருந்தும் அவை ஈற்றில் நன்மையே பயந்தன. ஆனதால் சுவாமிகளுடைய வேதவாக்கியம் ''ஒரு பொல்லாப்புமில்லை'' என்பது சரி என வாழ்க்கையிலே அறிந்து கொண்டேன்.

சுவாமிகள் திரிகாலமும் உணர்ந்த ஞானி என்று அனேக சந்தர்ப்பங்களில் எனக்குக் காட்டியிருக்கிருர். மேலே சிலவற்றைக் குறிப்பிட்டேன். இன்னும் இரண்டு சம்பவங்களைக் கூற விரும்புகிறேன். ஒருநாள் சுவாமிகளைச் சந்திக்க நான் எனது மகளையும் மருமகனையும் திருமணம் முடிந்து மூன்று தினத்தில் கொழும்பில் இருந்து வந்ததும் கூட்டிக் கொண்டு போனேன். சுவாமிகள் தனது அறைக்குள் வந்ததும் உட்காரச் சொல்லி எனது மகளை வளர்த்து விவாகம் செய்து வைத்த அன்பரின் பேரைச் சொல்லி எப்படி சுகமாய்க் கொழும்பில் இருக்கிருரா என்று விசாரித்தார். விவாகம் முடிந்து வரும்பொழுது அவர் சுகமாகவே யிருந்தார் எனக் கூறினேம். பின்பு பல கதைகளும் புத்திமதிகளும் சொல்லிவிட்டு நாங்கள் திரும்பும்போது ஒரு பக்கற் கற்பூரம் என்னிடம் தந்து எனது வீட்டிற்கு முன்னுல் இருக்கும் பிள்ளையார் கோவில் முன் எரிக்கும்படி சொன்னுர். நான் அப்படியே செய்தேன். அடுத்த நாள் தந்தி கிடைத்தது சுவாமிகள் விசாரித்த அன்பருக்குக் கடும் வருத்தமென்று. சுவாமிகள் கேட்ட தினத்தன்றே அந்த அன்பருக்குச் சுகவீனம் தொடங்கியது. நாங்கள் அனைவரும் கொழும்புக்குத் திரும்பி இரு தினங்களில் அந்த அன்பர் சிவபதம் அடைந்தார். வருத்தம் என்று தந்தி வந்ததும் எனக்கு நடக்கப் போவது தெரிந்தும் நான் ஒன்றும் பேசவில்லை. ஏனெனின் அது மரபல்ல.

1961ம் ஆண்டு தை மாதம் கொழும்புத்துறையில் ஒரு விவாகத்திற்குப் போய் இருந்தேன். அப்பொழுது

பட்டு வேட்டி சால்வை தரித்ததனுல் போகும் பொழுது சுவாமிகளிடம் போக விரும்பவில்லே. ஆனுல் திரும்பும் பொழுது போக வேண்டும் என்னும் நோக்கத்துடன் வந்தேன். அப்பொழுது சுவாமிகள் தனது ஆச்சிரமத்தை விட்டு வந்து சந்தியில் நின்ருர். என்னைக் கண்டதும் வாடா என்று கூப்பிட்டு ஒரு கரத்தால் அணைத்துக் கொண்டு இரண்டு மூன்று அடி எடுத்து வைத்தார். மற்றக் கையில் குடை இருந்தது. அப்போது சந்தியில் ஒருவர் பசுமாட்டுக்குக் கல்லால் எறிந்தார். அதைக் கண்ட சுவாமிகள் என்னேயும் விட்டு விட்டு மிகவும் உக்கிர முகத்துடன் (அப்படியான முகத்துடன் சுவாமிகளே ஒருபோதும் நான் கண்டதில்லே) கூறியதாவது.

''தமிழர் கூட்டமெல்லாம் எறியடா
கலேயடா................................பண்டாரநாயகா.

முதல் வசனத்தின்பின் பண்டாரநாயக்கா என்ற சொல் அதிக தாமதத்தின் பின் தான் அவர்வாயில் இருந்து வந்ததைகுறிப்பாக உணர்ந்தேன். சுவாமிகள் என்னுடன் எப்போதும் இரு கருத்துப்படப் பேசுவதால், கல்லால் பசுவை எறிந்ததைக் குறிப்பிட்டு அதோடு தமிழருக்கு யாழ்ப்பாணத்தில் வரப் போகும் கலவரத்தையும் முன்னதாக அறிந்திருந்தபடியால் அதையும் கூறிவிட்டார். இதன்பின் கச்சேரியின் முன் நடந்த சம்பவங்களும் சுவாமிகள் பசுவால் இடிபட்டதும் எல்லாரும் அறிந்த விஷயம். இப்படி சுவாமிகள் கூறினுர் என சிலருக்கு உடனே சொன்னேன். அப்போது ஒருவர் சுவாமிகள் தமிழர் முன் தென்இலங்கையில் பட்ட கஷ்டங்களைத் தெரிந்தும் பிறகும் அவர் வாக்கில் தமிழரை எறியடா கலேயடா என்று வசனம் வந்திருக்கப்படாது என்ருர். இவருக்கு சுவாமிகள் போன்ற ஞானிகளின் அனுபவம் இல்லே. அவர்கள் வாக்கில் வருவது அவர்களுக்கே தெரியாது. அது வேதவாக்கியங்கள் போல் உண்மையே. அப்படியான ஒருஇக்கட்டானநிலேயைத் தடுக்க நியதி இருந்தால் அதைத் தடுத்தும் விடுவார்கள். கச்சேரியின்முன் நடந்த சம்பவங்களின் பின் சுவாமிகளேயே பசு முட்டி மக்களுக்கு வரும் துன்பத்தின் ஓர்பாகத்தைத்தானே ஏற்றுக் கொண்டார். அல்லது போனுல் மிகவும் மோசமான நிலே நேர்ந்து அனேகர் இறந்திருக்கவும் கூடும்.

இச் சம்பவங்களுக்குப் பின் சுவாமிகள் நோய் வாய்ப்பட்டிருந்தபடியால் அவரை நேரில் கண்டு கதைக்கவில்லே.

எனக்கு மிகவும் கவலை உண்டாகியது. என்னைச் சிறு வயதில் ஆட்கொண்ட சுவாமிகள் எனக்கு ஒரு வழியையும் காட்ட வில்லையே. இன்னும் இந்தப் பிறவிக் கடலில் கிடந்து அழுந் தப் போகிறேனே என்று மணிவாசகர்போல் மனம் நொந் தேன். எனது வாழ்க்கையில் கஷ்டங்கள் நேர்ந்தால், சுவாமி கள் கனவில் தோற்றுவார். பின் சூரியனைக் கண்ட பனி போல் கஷ்டங்கள் தீர்ந்து விடும். இச் சந்தர்ப்பத்திலும் ஒரு நாள் கனவில் தோன்றி கீழ்க்கண்ட வாசகத்தை விளக்க மாகக் கூறினர்.

''தனித்துக்கிடந்து, வெறுத்து, வாழ்ந்து
கற்கண்டை ருசித்துப்பார்''

உடனே கருத்தும் விளங்கியது, இங்கு தனித்துக் கிடந்து என்பதற்குப் பிரமசரியத்தைக் கருதவில்லை. ஏனெனில் சுவாமிகள் எப்போதும் உன் கடமையைச் செய் என்று சொல்வார். மீன் வாங்கிக் கொண்டு போகும் பொழுது சந்தித்தாலும், கெதியாய்க் கொண்டுபோ வீட்டில் காத்துக் கொண்டு இருப்பார்கள் எல்லாம் செய்தே தீரவேண்டும் என்பார்.

இங்கே சுவாமிகள் கூறியது ஆன்மா தேகத்தோடு கூடிக் கிடக்கிறது. அதைத்தேகத்தினின்றும்பிரித்துத் தனித்திருந்து (ஆன்மாவிலேயே நிலைத்திருந்து) பற்றற்று வாழ்ந்தால், ஆன் மாநுபூதியைப்பெற்று பின் சிவானந்தத்தை ருசிப்பாய் எனக் கூறிஅருளினர். இக்காலத்தில்நான் சுவாமிகளுக்குத்தொண்டு கள் ஏதும் செய்யாதிருந்த போதும், எனக்குத் தூண்டுதலை உண்டாக்கி சில திருப்பணிவேலைகளில் ஈடுபடச்செய்து எனது ஆன்ம ஈடேற்றத்திற்கு உதவி செய்தார்.

கடவுள் ஒன்று என்று இருக்க சிவன், விநாயகர், சுப்பிர மணியர் என்ற பேதங்கள் என்ன? நான் வணங்கும் தெய்வம் சுப்பிரமணியராய் இருக்கே இவற்றுள் ஏற்றத்தாழ்ச்சி இரா தோ என்றசந்தேகம் உண்டானபோது,ஒருநாள் என்வீட்டின் அருகாமையிலுள்ள விநாயகர் ஆலயத்தில் காலையில் கும் பிட்டு நிற்கும்போது கோவிலின் வடக்கு வீதியில் தீர்த்தக் குன்றின்மேல் சுப்பிரமணிய உருவம் காட்சி கொடுத்து மறை ந்தது. இதனல் இரண்டு வேறு தோற்றக் காட்சியாய் இருந்த போதும், உள் வஸ்து ஒன்றுஎன விளக்கிற்று. இன்னொருநாள்

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் திருவிழாக் காலத்தில் பகல், கோபுரவாசலின் உள் நின்று கும்பிடும்பொழுது நல்லூர்க் கந்தன் காட்சியைச் சனங்களின் மேல் வெளியில் கண்டேன். இதில் விரிந்த இரு கரங்களிலும் பச்சையும், மரகதக்கல்லும் உள்ளங்கையில் பதிந்திருக்கக் கண்டேன். இங்கேயும் நிறம் இரண்டாய் இருந்தபோதும் வஸ்து ஒன்று என்றே ஸ்தாபிக்கப்பட்டது. எனது இஷ்ட தெய்வமாகிய முருகனே மானிட உடல்தாங்கி சுவாமிகளாக என்னை ஆட்கொள்ள வந்தார்என நினைத்தேன். வெவ்வேறு தோற்றங்களாய் இருந்தபோதிலும் எல்லாம் பரம்பொருளாகிய சிவனையேகுறிக்கும் இதில் கந்தப் புராணச் செய்யுள் குறிப்பிடத்தக்கது.

**ஈசனேய வனுடலான் மதலையாயி னன்காண்**
**ஆசிலா வவன் அறுமுகத் துண்மையாய் அறிநீ**
**பேசிலாங் கவன்பரனொடு பேதகன் அல்லன்**
**தேசுலாவதன் மினியிடைக்கதிர் வருதிறம்போல்.**

**தன்னிகர் இன்றிமேலாய்த் தற்பரவொளியாயாரும்**
**உன்னரும் பரமாய்நின்ற ஒருவனே முகங்களாறும்**
**பன்னிருபுயமுங் கொண்டு பாலகன்போன்று கந்தன்**
**என்னுமோர் பெயரும் எய்தியாவரும் காணவந்தான்**

சுவாமிகளின் சுகவீனத்தின் பின் தூரநின்று தரிசித்து திரும்பி விடுகிறது வழக்கம். அப்போதுதான் மேற்கூறிய சம்பவங்கள் நடந்தன. என்றாலும் 1963 நடுப்பகுதியில் சில சந்தேக வினுக்களுடன் அதாவது சிலர் பதி, பசு, பாசம் என முப்பொருள்கள்இல்லையென்கிறார்கள். உள்ளதுஒருபொருளே அது ஆன்மா. அதுவே பிரமம் என்கிறார்கள். இதன் மர்மம் என்ன என்ற சிந்தனையுடன் போனேன். அன்று ஒரு அன்பரே ஆச்சிரமத்தில் நின்றார். சுவாமிகள் இருந்தஇடத்தில் இருந்து படுக்கைக்குச் செல்வதற்கு குறிப்பால் உணர்த்தினார். மற்ற அன்பரும் நானும் சுவாமிகளை படுக்கையில் கொண்டுபோய் இருத்தினோம். பின் அவர் திருப்பாதங்களைத்தூக்கிக் கட்டிலில் வைக்கும்பொழுது சுவாமிகள் பின்வருமாறு கூறினார்:-

''நமச்சிவாய வாழ்க! சிவாய! சிவாய! சிவ! எனக்கே இந்த மறுமொழி என்று நினைத்துக் கொண்டு திரும்பி விட்டேன். இதனால் உலகு, இறை, உயிர் மூன்றும் வாழ்க என்ற சொல்லினால் உண்மை என உணர்த்தி, பின் ஆன்மா எப்படி

சிவமாகும் என்பதை மற்றச் சொற்களால் விளக்கினர். இதன் விரிவான பொருட்கள் நல்லதெளிவாக இச்சம்பவத்தின் பின் அவர் ஆணைப்படியோ அல்லது திருவருளின்படியோ சிவ தொண்டன் மலர் 28, இதழ் 1,2,3,4இல் சமயங்களின் தாயனைய் சிவநெறி என்னும் தலை அங்கத்தின் கீழ் வரையப் பட்டிருந்தது. இங்கே சுவாமிகள் வாக்கியம் ''முழுவதும் உண்மை'' என்பதும் கவனிக்கத்தக்கது. இதன் கீழ் மணி வாசகர் பாடல் ஒன்று குறிப்பிட விரும்புகிறேன்.

**கல்லாத புல்லறிவிற் கடைப்பட்ட நாயேனை**
**வல்லாளனாய் வந்து வனப்பெய்தி இருக்கும் வண்ணம்**
**பல்லோரும் காண எந்தன் பசு, பாசம், அறுத்தானை**
**எல்லோரும் இறை ஏசுதில்லை அம்பலத்தே கண்டேனே.**

இதில் பசு, பாசம், அறுத்தானை என்றால்—பாசத்தன்மை யும், பசுத்தன்மையும் தொலைத்தவனை என்று கொள்ளலாம். பாசம் - ஆணவம், பசு - ஆன்ம உணர்ச்சி அல்லது தன்னுணர்ச்சி.

சுவாமிகள் சிவனடி சேர்வதற்கு முன் கடைசியாக அவ ரைச் சந்தித்தது 1964ம் ஆண்டு தை மாதம். அப்போ கொழும்புத்துறைக்குச் சென்றபொழுது எனக்குமுன் சென்ற அன்பர் ஒருவர், தன்னை சுவாமிகள் ஏசிக்கலைத்தார் என்று சொன்னர். நானும் பயந்து வெளிவிருந்தையில் அவருடன் உட்கார்ந்திருந்தேன். அதன் பின் ஓர் அம்மையார் வந்தார். அவரும் உள்ளேபோக மறுத்தார். பின்பு அங்குநின்ற இரு வரும் என்னை முதல் போகச்சொன்னர்கள், எனக்குப் பின்னல் அவர்கள் இருவரும் வந்தார்கள். நான் சென்ற பொழுது சுவாமிகள் என்னைக் கிட்டக்கூப்பிட்டு எனது இருகைகளையும் தனது இருகைகளினுல் பிடித்துக் கொண்டு நீ பெரிய கள்ள னடா என்றார். அதற்குச் சுவாமிகளே என் நெஞ்சம் கவர் கள்வன் என்றேன். சிரித்தார். பின்கொஞ்சநேரத்தால் விடை கொடுத்து அனுப்பினர். மற்ற அன்பர்கள் பார்த்து அதிசயித் தார்கள். அவர்களும் சுவாமிகளைத் தரிசித்துக் கொண்டு திரும்பினர்கள்.

சுவாமிகள் சிவபதம் அடைவதற்கு மூன்று நான்கு தினங் களுக்கு முன் அவரைப் பார்ப்பதற்கு திருவருளே உதவி புரிந் தது. 19-4-64 புதன்கிழமை இரவு 4மணி கனவுகண்டேன்.

சுவாமிகள் ஒரு மண்டபத்தின் நடுவில் படுத்திருக்கிறார். அன்பர்கள் சூழ்ந்திருந்தார்கள். நான் அவர் பக்கம் சென்றேன். அவர் என்னைக் கட்டிப்பிடித்துக் கொண்டு சிறு பிள்ளை தொடக்கம் வளர்த்தனுன் அல்லவோ என்றுஅழுதார். நானும் அழுதேன். உடனே விழித்து விட்டேன். நேரத்தைப் பார்த்தேன். பின் தூக்கம் இல்லை. கீழ்க்கூறும் சம்பவமும் எனது நினைவுக்கு அப்போ வந்தது.

''ஒருநாள் சுவாமிகள் இராமகிருஷ்ண மிஷன் பெரியாரோடு சிவதொண்டன் முன் நிற்கும்போது, அப்பாதையால் நான் சென்று கொண்டிருந்தேன், சுவாமிகளைக் கண்டதும் விழுந்து கும்பிட்டேன். சுவாமிகள் அப்பெரியாரைப் பார்த்து இவனுக்கு நானே பிதாவாக இருந்தேன். சிறுவயது தொடக்கம் என்று கூறி என் சரித்திரமும் சொன்னார்.

ஆனபடியினுல் இக் கனவினுல் எனக்கோ அல்லது, சுவாமிகளுக்கோ ஏதோ நடக்கப்போகுது என்று நினைத்துக் கொண்டு வியாழக்கிழமைசாயந்திரம்கொழும்புத்துறைக்குப் போனேன். சுவாமிகள் உடல் நலக்குறைவாயிருந்தார். பின் ஞாயிற்றுக்கிழமை, திங்கட்கிழமை உடல் நலம் மிகவும் பாதிக்கப் பட்டிருந்தது. நான் கண்ட கனவையும் சில அன்பருக்குச் சொல்லியிருந்தேன். செவ்வாய்க்கிழமை காலையில் கொழும்புத்துறைக்கு ஆச்சிரமத்துக்குப் போன பொழுது இரவு 3.15மணிக்குத் திருவடி யடைந்தார் எனக் கேள்விப் பட்டுப்போய்தரிசித்தேன். அவர் பூதவுடலை விட்டுப்பிரிந்தது கவலைக்கிடமாயிருந்தது. ஆனுல் சுவாமிகளின் திருவருள் இவ்வளவு காலமும் என்னுடன் நின்றதாக உணர்ந்த இந்த அடியவனை இன்னும் அத்திருவருள், வழிகாட்டியாக நின்று நித்தியமாகியபேரின்பத்தைஅடையச்செய்யும்என்பதுஉறுதி.

---

# கலியுகக் கடவுள்
# ஸ்ரீமத் ஞானனந்த கிரி சுவாமிகள்

(ஞானபாத கேசவன்)

பதினெட்டாம் நூற்றுண்டில் வடகன்னட ஜில்லா, மங்களபுரி என்கின்ற ஊரில் சிவபக்த சிரோண்மணி வெங்

கோப கனபாடிகளுக்கும், சக்குபாய் அம்மையாருக்கும், ஜனித்தவர் ஸ்ரீமத் ஞானனந்தகிரி சுவாமிகள்.

ஏழாவது வயதில் உபநயனம் பெற சிறு வயதிலேயே பற்றற்றுக் காணப்பட்டார். கடவுள் பக்தி மேலீட்டால் பாண்டுரங்கநாதனைப் பஜித்து, அதன் பயனாக பல க்ஷேத்திரங்களையும் தரிசித்து, முடிவில் தகுந்த ஞான ஆசிரியரைத் தேடி, ஸ்ரீநகர் ஆதிசங்கராச்சார்ய சர்வக்ஞ பீட மடத்தில் காஷ்மீர் தேசத்து அரசனால் பூஜிக்கப்பட்ட பரமஹம்சபரிவ் ராஜ காசார்ய ஸ்ரீசிவரத்ன கிரிசுவாமிகள் காசிக்கு எழுந்தருள, அங்கு தரிசித்து, அவருடன் ஜோதிர் மடத்துக்குச் சென்று அங்கு குருகுலவாசம் செய்து கொண்டும் சத்குரு மூர்த்திக்கு கமண்டலம் தாங்கி, பலவித சாஸ்திரங்களையும் கற்று தலைமை மாணவராகத் திகழ்ந்தார். பிறகு குருவினால் சந்நியாசம் பெற்று ஸ்ரீஞானனந்தகிரிஎன்னும் ஆசிரமநாமம் பெற்றார்.

சுவாமிகளுடையகுரு 81ம்வயதில் சித்திரைமாதம்சித்ரா நக்ஷத்திரம், பௌர்ணமி தினத்தன்று சித்தி அடைந்தார். அச் சமயம் நமது குருதேவருக்கு வயது முப்பது. அதன்பின் பல க்ஷேத்திரங்கள் சென்றுதரிசித்தும், இமயமலைக் குகையில் சுமார் 35வருடங்களுக்கு மேலாக கடுந்தவம் இருந்தும்பிரம்ம நிஷ்டரானார்கள். இலங்கை, பர்மா, திபெத் முதலிய தேசங்களிலும் சுற்றுப் பிரயாணம் செய்துள்ளார்கள். ஆத்ம ஞானம் பெற்றுள்ள இவர் பற்பல பாஷா ஞானமும் பெற்றுள்ளார்கள். ரமண மகரிஷி, ராமகிருஷ்ண பரமஹம்சர். அவதூதஸ் சுவாமிகள் போன்ற மகான்களிடம் தொடர்பு கொண்டிருந்ததாக அறிகிறோம். பல வருடங்களாக தமிழ் நாட்டில் வசித்துக் கொண்டு, சமீபத்தில் சென்னை மாகாணத்தில் தென்னாற்காடு ஜில்லாவிலுள்ள திவ்ய க்ஷேத்திரமான திருக்கோவலூருக்கு அருகில் சுமார் எட்டு ஆண்டுகளாக ''ஸ்ரீஞானனந்ததபோவனம்'' என்கிறஇடத்தில்சகலமதத்தினரும் வணங்கும்படியாக கலியுக வரதக்கடவுளாக இருந்து அனுக்ரஹித்து வருகிறார்கள். ஆண்டுதோறும் சித்திரை மாதம் சித்ரா நக்ஷத்திரம் பௌர்ணமி அன்று சத்குரு பூஜையும் வெகு விமரிசையாக நடந்து வருகிறது. இந்தியாவிலிருந்து பல பாகங்களிலிருந்தும் பக்தர்கள் விஜயம் செய்து ஸ்ரீசுவாமிகளது அனுக்கிரகத்தைப் பெற்று வருகிறார்கள். சுவாமிகள் திருஷ்டியினால் வரக்கூடிய அன்பர்களின் மனம்

# அத்தனின் அருள்

(ஆசிரியர் 'இளங்கண்ணன்' தலைமையாசிரியர்,
பூங்கா உயர்தர ஆரம்பபள்ளி - உடுமலை)

— தொடர்ச்சி —

இறைவனை மதியாதார் இருவர். ஒன்று ரஜோ குணமும் தமோ குணமும் நிறைந்த அசுரர்கள். மற்றொன்று இறைவன் இருப்பதை மறுத்து மறுத்து நா மரத்துப் போன நாத்திகர்கள். இந்த இரு சாராரும் தன் வலிமை, ஆதிக்கம், பண்பாடு, தனக்குரிய செல்வம் ஆகிய யாவுமே உலக வாழ்க்கையின் முடிந்த பயனாகும் என்று எண்ணி இறைவனை மதியாதவர்கள். அத்தகையோருக்குப் பகைவனாகவே தோன்றுமாறு விளங்கி அவர்களுக்கு அறிவை அளிக்கின்றார். இறைவன் இவர்களிடத்தில்தான் பெரும்பாலும் மறக்கருணை பாலிக்கின்றான். துருப் பிடித்துக் கிடக்கும் இயல்புடைய இரும்பினைப் பயன் உடைய எஃகாக மாற்றுவது போன்று இவர்களைத் திருத்தி நல்வழிப் படுத்துகிறார். ஒரு பிறவியில் ஞானமடையாவிடில் பல பிறவிகளை அளித்து அனுபவப்பட்டு உணரும் வகையில் துன்பங்களை அளித்து ஞானத்தை அளிக்கின்றான். இதற்குக் கீதையில் வரும் வரிகள் சான்றாக இருக்கின்றன.

''அகங்காரம், பலம், இறுமாப்பு, காமம், குரோதம் இவைகள் உள்ளவர்கள் தங்கள் தேகத்திலும் பிறர் தேகத்திலும் உள்ள என்னை வெறுத்து அவமதிக்கின்றனர்''.

''துவேஷமுடையவர்களை, கடையவரை, இழிந்தோரை, பிறந்து இறந்து உழலும் உலகில் அசுரப் பிறவியிலேயே திரும்பத் திரும்ப நான் அன்னவர்களை தள்ளுகின்றேன்''.

---

**முன்பக்கத் தொடர்ச்சி**

பரிசுத்தமாகி, சதா ஆனந்த பரவசமடைகின்றனர். சுருக்கமாகக் கூறின் சுவாமிகள் ஒரு அவதார புருஷர் என்றே சொல்ல வேண்டும்.

முற்பிறவியில் வைகுந்தத்தில் ஜய விஜயர் என்று விளங்கிய துவாரபாலகர்கள் முனிவர்களை உள்ளே விடாமல் அவமதித்த காரணத்தினால் மூன்று பிறவிகள் வரை இறைவனிடத்தில் விரோத பாவத்துடன் சமர்புரிந்து முடிவில் ஞானம் பெற்று அவனை அடைந்தனர். இவர்கள் இரணியன், இரணிய கசிப்பு, இராவணன் கும்பகர்ணன், சிசுபாலன் ஜராசந்தன் ஆகிய பிறவிகளை எடுத்தனர். இரணியன் அண்டமனைத்திலும் உள்ள பொருள்களாலும் உயிரினங்களாலும் தான் இறக்கக்கூடாது என்று படைக்கும் தொழிலைச்செய்யும் பிரம்மாவிடத்தில் கடுந்தவம் புரிந்து வரம் வாங்கினான். அதனால் ஏற்பட்ட ஆணவத்தினாலும் தன் தம்பியை திருமால் கொன்றதனால் ஏற்பட்ட சினத்தினாலும் தன்னைத் தவிர வேறு ஒருவரையும் வணங்கலாகாது என்று ஆணையிட்டான். ஆகவே அவன் மகனாகிய பிரகலாதன் திருமாலின் மந்திரமாகிய எட்டெழுத்தைக் கூறி அவனை வணங்குமாறு கூறியபோது திருமாலை அவமதித்தான்.

**''கேளிது நீயும் காண கிளர்ந்த கோளரியின் கேழல்**
**தோளொடு தாளும் நீக்கி நின்னையும் துணித்து பின்னென்**
**வாளினைத் தொழுதலல்லால் வணங்குதல் மகளிர் ஊடல்**
**நாளிதும் உளதோ என்ன அண்டங்கள் நடுங்க நக்கான்''**

என்பது கம்பர் வாக்கு.

நீ கூறுகின்ற அரியின் தோள்களையும் கால்களையும் வெட்டிய பின்னர் உன்னையும் வீழ்த்தி என் வீர வாளினை வணங்குவேன் அல்லாமல் மகளிரொடு ஊடல் புரியும்போதும் வணங்குவது என்பதில்லை எனக் கூறி சினத்தோடு சிரித்தான். தூணில் அறைந்த போது நரசிம்மம் தோன்றி உள்ளுமில்லாமல் வெளியுமில்லாமல் இருக்கும் வாயிற்படியில் காலையுமல்லாமல் மாலையுமல்லாமல் இருக்கும் விடியற்காலையில் தேவருமல்லாமல் மனிதருமல்லாமல் விலங்குமல்லாமல் இருக்கும் உருவத்தோடு உயிருமல்லாமல் உயிர் இருக்கின்ற ஆயுதமல்லாத நகங்களினால் அவனை மடிமீது வைத்துக் கீறிக் குருதியைக் குடித்து அவனுக்கு அளித்த வரத்திற்குப் பழுது இல்லாமல் அவனைக் கொன்றார். இப்படி மேலும் இரு பிறவிகளாகிய இராவணன், சிசுபாலன் எனப் பிறந்த பின்னர் ராமன் வாளியாலும் கிருஷ்ணனின் போர்த் திறத்தாலும் மாயும்

தறுவாயில் ஞானம் அடைந்தான். இறைவன் மதியாத வரை அவர் வழியே விட்டுப் பிடித்து ஞானத்தை உணர்த்து கின்றார்.

இறைவனை மதித்தவர் மனந் தளராமல் அவன் மீது பற்று வைக்கும் பொழுது அவன் அவர்களுக்கு அருளுகின்றான். தந்தையைப் பார்த்து, ''வன்தொழில் ஒழித்து வணங்குதி வணங்கவே உன் புன் தொழில் பொறுக்குமென்று'' அறிவுறுத்திய பிரகலாதன் நரசிம்ம மூர்த்தியின் கோபத்தை அடக்கியதோடு அவரால் ஆட்சி பீடத்தை அடைந்தான். அதோடு அவன் கருத்துக்கிணங்க அவன் மரபிற் தோன்றியவர்களை 21 தலைமுறை வரையில் அழிக்காமல் விட்டபடியால் மாபலி சுதலலோகம் அடைந்தார். அவனும் வீடுபேற்றை அடைந்தான். தம்மை மதித்து வந்த அடியார்களுக்கும் மதியாத அசுரர்களுக்கும் ஞானத்தை, இறைவன் நல்கியதினால் வள்ளலார் ''மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதி கொடுத்த மதியே'' எனப் பாடினார்.

இறைவன் மிக சாமானியமான மனிதர்களும் பல நலங்களை அடைய அருள் புரிந்துள்ளான். செல்வம் ஈட்டலும் சேகரித்து வைத்தலும் வாழ்க்கையின் பயனாகக் கொண்டு வாழ்ந்து வந்த புரந்தரரை அவரது மனைவியின் மூலமாகத் திருத்தி ஞானமடையச் செய்தார். கனவு போன்ற வாழ்வில் நீர் குமிழாக விளங்கும் இளமை எனும் இன்பத்தை நுகர இச்சித்து நெறி தவறித் திரிந்த வேமன்னயோகி முன் செய்த நல்வினையால்ஞானியானார். திருமாலுக்குத் திருமாலை சூட்டும் தொண்டினை புரிந்து வந்த விப்ரநாராயணரை தேவதேவி தன் வசப்படுத்தியதால் அவர் தான் வாழ்ந்த வழி தவறியதற்காக அவருக்கு உலக மாயையைத் தொட்டுக் காட்டி அவரை ஆட்கொண்டான். தேவதேவிக்கு பொன் வட்டில் கொடுத்து அடியவரை அரசன் முன் வருமாறு செய்து பின்னர் அவரை விடுவித்தார். ''மனவிதையைச் சேற்றில் அழுத்தித் தாமரையாக மலர வைத்த'' பின்னர் பூமாலை சூட்டிய விப்ரர் பாமாலை சூட்டும் தொண்டரடிப் பொடி ஆழ்வாராக மாறினார். எண்ணற்ற மனிதர்கள் அவர்கள் நல்வினையால் இறைவனால் பலநலங்கள் பெற்று ஞானமுதிர்ந்து முக்தி அடைந்தனர். அவனருளாலே அவன் தாள் வணங்கினர். இவ்வடியைப் பாடிய மாணிக்கவாசகரும் திருவாதவூரராக அமைச்சர் தொழில் ஆற்றியபொழுது

பாண்டியனுக்கு பரிவாங்கச் சென்று, அகத்துறவு அடைந்திருந்ததால் பெருந்துறையில் பரமகுருவினிடத்தில் உள்ளத்தைப் பறிகொடுத்து பரி வாங்காமல் பெருந்துறை உறையும் சிவன்கோயிலை கட்டினூர்; சிவனடி சேர்வதற்காகவே வேட்கை கொண்டு அலைந்து வாய்ப்புற்றபொழுது பயன்படுத்திக் கொண்டதற்காகவே அரசன்ஒறுத்ததைப்பொறுத்து ஆண்டவனிடம் அடைக்கலம் பெற்றார். தன்னைக் கொடுத்து அவன் மயமாகிக் கொள்ளுதலே திருவாசகத்தின் பொருளாய் காட்டி மறைந்தார்.

இறைவன் நரர்களுக்கு அருளியது போல் சுரர்களுக்கும், பாற்கடலைக்கடைந்து அமுதம் எடுக்க முயன்றபோது தோன்றிய ஆலகாலவிஷத்தை உண்டு அருளினான். நடுநின்ற நல்லான் ஆதலால் அஃறிணை இனமாகிய நாரைக்கும் சிலந்திக்கும் முக்திக் கொடுத்தான். எனவே அடிகளார்,

''நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலங் கொடுக்கும் நலமே,
எல்லார்க்கும் பொதுவில் நடமிடுகின்ற சிவமே''

என்று பாடியுள்ளது இவ்விடத்தே உன்னத்தக்கது.

எனவே இங்ஙனம் இறைவன் கல்லாதவருக்கும் கற்றவருக்கும் பேரின்பக் களிப்பாகி, காணார்க்கும் கண்டவருக்கும் ஞானக் கண்ணாகி, வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரதனாகி மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் அறிவாகி நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுநிலையாளனாகி அறமாகி, நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலங்கள் பல நல்கும் மங்கலமாகி, எல்லோருக்கும் பொதுவாகி சமநோக்குடன் நடமிடுகின்ற சிவமாகி விளங்குவதினால் தன் குறை தீர்க்க அவனை இறைஞ்சிய அடிகளார் அவனருளை விளக்கும்அருள்விளக்கமாலையில்பாடியுள்ளபின்வரும்பாடலை இனி முழுமை தொகுத்துக் காண்போம்.

''கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே
காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணே
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே
நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே
எல்லார்க்கும் பொதுவில் நடமிடுகின்ற சிவமே
என்னரசே யான் புகலும் இசையுமணிந்தருளே''.

என்று பாடினார்.

—முற்றும்—

# சித்த மருத்துவம்

(டாக்டர்: ச. ஆறுமுகநாதன், கல்லிடை குறிச்சி)

## மணி - மந்திரம் - மருந்து

இம்மூன்றும் சித்தமருத்துவக் கலையில் ஒன்றோடொன்று இணைந்திருத்தலைக் காணலாம். மணி என்பது ஜோதிடம். இவை வான்நிலை பார்த்து காலம் அறிவது மந்திரம். என்பது மனதை உறுதிப் படுத்துதல். மருத்துவக் கலைகண்ட சித்தர்களுக்கு காலங்களின் பருவநிலை அறிய ஜோதிடம் என்னும் வானசாஸ்திரங்களும், மந்திரம் என்னும் மனோதிடச் சக்தியும் மிகவும் அவசியமாய் இருந்தன. மந்திரம்: மந்-மனம், திரம்-உறுதி என்று பிரித்துணரும் சக்தியைக் கொண்டது. இதே போன்று தந்திரம்: தன்-தன்னுடைய, திரம்-உறுதி தன்னுறுதி, தன்நம்பிக்கை என்றும் கொள்வதாகும்.

மணியென்னும் வானசாஸ்திரத்தின் மூலம் ஒவ்வொரு பருவ காலத்தையும் தெரிந்து, அவ்வக் காலங்களில் கிடைக்கும் மூலிகைகளை சேகரிக்கவும், மருந்துகளை புடமிடவும், நோய்களுக் கேற்ப பருவ காலமறிந்து மருத்துவம் செய்யவும் மருத்துவக் கலைக்கு மணியென்னும் ஜோதிடம் துணைக் கலையாக உள்ளன. இதனாலே தான் அன்றைய சித்தர்கள் மணி—மந்திரம்—மருந்து ஆகிய முக்கலைகளையும் திறம்படக் கையாண்டு செயற்கரும் செயலைச் செய்தனர்.

மந்திரம் என்னும் மனதை உறுதிப் படுத்தும் சாஸ்திரத்தை பலவகைப் பிணிகளுக்கு ஏற்பவும். செயல்களுக்கு ஏற்பவும் பல தடவைகள் உச்சரித்து மந்திர எழுத்துக்களை சக்கரங்களில் நிரப்பி உருவேற்றும் முறைகளை பதினெண் சித்தர்கள் பாடலில் காணலாம். மந்திர எழுத்துக்களை நூறு, ஆயிரம், லட்சம், கோடி, பலகோடி தடவைகள் உருவேற்றி தொட்டது துலங்கவும், சொன்னது பலிக்கவும், நல்லதே செய்யவும், நல்லதையே நினைக்கவும் ஆகிய சித்திகளை பெறப் பயன் படுத்தியவுடன் மருந்துகளைத் தேடி காடு, மலைகளில் அலைந்து திரியும் சமயங்களில் கொடிய விலங்குகளிடமிருந்தும் விஷப் பிராணிகளிடமிருந்தும் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மந்திரத்தை ஒரு பேராயுதமாக சித்தர்கள் பயன்படுத்திக் கொண்டனர்.

தட்ப வெப்ப நிலை மாற்றத்தாலும் நிலம், நீர், காற்று ஆகியவைகளின் குண வேறுபாட்டாலும் ஏற்படும் நோய்களுக்கு இயற்கை தரும் மூலிகையாலும், உலோகங்களாலும் மருந்துகள் தயாரித்து காப்பு, நீக்கம், நிறைப்பு என்ற மூன்று தத்துவப்படி நோய் வராது காக்கவும், வந்தநோயை நீக்கவும், குறைந்த சத்தை நிரப்பவும் வாதம்—பித்தம்—கபம் என்ற முத்தோச அடிப்படையில் பிரித்து நோய் நீக்கம் செய்தலை மருத்துவம் - என்று சொல்லுதல் வழக்கமாகும்.

(தொடரும்)

விருப்பம் இல்லாத நிலைமையிலுங் கூடத் தகாத காரியத்தைச் செய்யும்படி தூண்டுவது உனது பழைய வாசனைகளே. இவ் வாசனைகளின் வலிமையினுல் உனது மனுேசக்தி குன்றி விடுகின்றது. எனினும் சாதனையைத் தொடர்ந்து செய்வாயாகில் இம் மனுேசக்தி வலிவுறுவதுடன் உனது பழைய வாசனைகளும் உன்னை விட்டு அகலும்.

சாதகனின் வாழ்க்கை சுறுசுறுப்பும் ஆற்றலும் நிறைந்ததாக இருத்தல் வேண்டும். செயலற்று இருப்பது சத்துவமோ அமைதியோ நிறைந்த வாழ்க்கை ஆகாது. சாதனையில் முன்னேறுகின்ற அளவுக்கு உன்னில் மனத்தூய்மையும் சாந்தியும் ஒளியும் சக்தியும் ஆனந்தமும் பெருகும்.

— சுவாமி சிவானந்த சரஸ்வதி.

'ATHMAJOTHI' Registered at the G.P.O.as a Newspaper. M. L. 59/300

## சந்தா நேயர்களுக்கு!

**அன்புடையீர்!**

17 ஆவது ஆண்டு 9 வது சோதி இன்று உங்கள் கையில் கிடைக்கின்றது. சந்தா நேயர்களின் உதவியினலேயே சோதி பதினறு ஆண்டுகளைக் கடந்துள்ளது. சோதிக் குழந்தை உங்கள் வீட்டைத் தேடிவரும்போது என்ன பரிசு அளிக்கப் போகின்றீர்கள். உங்கள் சந்தாவை உடனே அனுப்பி வைத்தல்தான் நீங்கள் கொடுக்கும் பரிசாகும். என்றென்றும் உங்கள் ஆதரவு கிடைப்பதாக.

இந்தியாவிலுள்ள சந்தாநேயர்கள் தமது சந்தாவை வழக்கம்போல்

R. வீரசம்பு, சம்பு இண்டஸ்ரீஸ்,
அரிசிப்பாளையம், சேலம்—9.

என்ற விலாசத்திற்கு அனுப்பி வைப்பதோடு இவ்வீடமும் அறியத் தருவீர்களாக.

## ஆத்மஜோதி நிலயம்-நாவலப்பிட்டி. (சிலோன்).

## ஆத்மஜோதி நிலய வெளியீடுகள்!

| | | |
|---|---|---|
| 1. | ஆத்மஜோதி மலர் (1963) | 2.00 |
| 2. | சைவஇலக்கியக் கதா மஞ்சரி | 3.00 |
| 3. | ஆத்மநாதம் | 3 00 |
| 4. | தீங்கனிச் சோலை | 2 50 |
| 5. | பாட்டாளிபாட்டு | 1.50 |
| 6. | திவ்ய ஜீவன சங்க வெள்ளி விழா மலர் | 1.25 |
| 7. | கூட்டு வழிபாடு | .30 |
| 8. | நவராத்திரிப் பாடல் | .30 |
| 9. | மார்கழி மாதப் பாடல் | .20 |
| 10. | கதிர்காமப் பதிகம் | .25 |
| 11. | செல்லச்சந்நிதி பாடல் | .15 |
| 12. | கந்தரனுபூதி | .25 |
| 13. | அறிவுரைக் கதைகள் | .65 |
| 14. | நித்திய கருமவிதி | .25 |
| 15. | கதிரைமணிமாலை | .50 |

தபாற் செலவு தனி

அச்சிடுவோர்:- ஆத்மஜோதி அச்சகத்தினர்
அச்சிடுவிப்போர்:- ஆத்மஜோதி நிலயத்தினர்
வெளியீட்டு தேதி:- 16-7-65.